DEPOSITION OF WITNESS

(CHAPTER XXIII Code of Criminal Procedure)

---

IN THE COURT OF IV ADDITIONAL DISTRICT & SESSIONS JUDGE, MADURAI

**S.C. No.308/2024**

**P.W.3**

DEPOSITION OF WITNESS FOR PROSECUTION DEFENCE COURT

| | | |
|---|---|---|
| NAME | : | பெரியசாமி |
| Father Name | : | வடிவேல் |
| VILLAGE | : | |
| CALLING | : | |
| AGE | : | 37 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 02.02.2026.

( எதிரி ஆஜர்.)

<u>**அரசு தரப்பில் முதல் விசாரணை :**</u>

நான் தற்போது விக்கிரமங்லம் காவல்நிலையத்தில் தலைமை காவலராக பணிபுரிந்து வருகிறேன். வழக்கு சமயம் நாகமலைபுதுக்கோட்டை காவல்நிலையத்தில் தலைமை காவலராக பணிபுரிந்த போது, நாகமலைபுதுக்கோட்டை காவல்நிலைய குற்ற எண்.266/2022 பிரிவுகள் 6(b), 7 (2) Tobacco Act and 328 இ.த.ச வழக்கில் கைப்பற்றபட்ட சொத்துக்களை சென்னை தடயஅறிவியல் ஆய்வகத்தில் ஒப்படைத்து வர கொடுக்கப்பட்ட வேண்டுதல் தபால் மற்றும் கடவுச்சீட்டு மற்றும் சொத்தின் மாதிரிகள் ஆகியவற்றை பெற்று 19.12.2022ம் தேதி சென்னை தடயஅறிவியல் ஆய்வகத்தில் ஒப்படைத்து விட்டு நிலையம் வந்தேன். இது சம்மந்தமாக காவல்நிலைய ஆய்வாளர் அவர்கள் என்னை விசாரணை செய்தார்கள்.

<u>**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை :-**</u>

காவல் ஆய்வாளர் உத்தரவின் பேரில் நான் சென்னை தடயஅறிவியல் ஆய்வகத்திற்கு சென்றேன். மேற்படி உத்தரவை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால், எனக்கு தெரியாது. மேற்படி உத்தரவை எந்த தேதியில் பெற்றேன் என்று எனக்கு ஞாபகமில்லை. நான் சொன்ன நேரத்தில், சொன்ன

விதத்தில், சொன்ன இடத்தில் வழக்கு சொத்தை கைப்பற்றபடவில்லை என்றும், குறிப்பிட்ட நேரத்தில் நான் சென்னை தடயஅறிவியல் ஆய்வகத்தில் வழக்கு சொத்தை ஒப்படைக்கவில்லை என்றும், காவல் ஆய்வாளர் கேட்டுக்கொண்டதற்கிணங்க உண்மைக்கு மாறாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**மறு விசாரணை –** இல்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு சாட்சியால் "சரி" என ஒப்புக்கொள்ளப்பட்டது.

JOHN SUNDARLAL SURESH

Digitally signed by JOHN SUNDARLAL SURESH
Date: 2026.02.02 18:17:11 +0530

**நான்காவது கூடுதல் மாவட்ட நீதிபதி,**
மதுரை.